**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 12.08.2025

**அசல் வழக்கு எண். 248/2021**

**பி.சா.1 – லட்சுமி, க/பெ.விஜயகுமார்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

விடுதலை பத்திரம் தாக்கல் செய்து உள்ளீர்கள் அதில் உள்ள கையொப்பம் உங்களுடையது என்றால் சரிதான். நீங்கள் எழுதி கொடுத்தது உங்கள் அண்ணன் பக்தவச்சலத்திற்கு என்றால் அது எனக்கு தெரியாது. அது விடுதலை பத்திரம் என்று எனக்கு தெரியாது. எப்பொழுது அது விடுதலை பத்திரம் என்று கண்டுபிடித்தீர்கள் என்றால் 2021 ஆம் ஆண்டு விடுதலை பத்திரம் என்று கண்டுபிடித்தேன். வக்கீல் நோட்டீஸ் வீட்டிற்கு வந்த போது கண்டுபிடித்தேன். 20.08.2021 அன்று நீங்கள் தான் முதலில் நோட்டீஸ் உங்கள் அண்ணனுக்கு கொடுத்தீர்கள் என்றால் சரிதான். கடந்த 2021 ஆம் ஆண்டு நீங்கள் அனுப்பிய நோட்டீசில் சமீபத்தில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சமீபம் என்பது எப்பொழுது என்றால் எனக்கு புரியவில்லை. உங்கள் தகப்பனார் இருந்ததற்கு வாரிசு சான்றிதழ் எப்போது வாங்கினீர்கள் என்றால் 2016ல் வாங்கினீர்கள் என்றால் அது பற்றி தெரியாது. வழக்கில் சொல்லப்பட்ட விவரங்களை வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். 2016 ம் ஆண்டு உங்கள் தாயாருக்கு வாரிசு சான்றிதழ் வாங்கினீர்கள் என்றால் அது பற்றி தெரியாது. என்ன படித்து உள்ளீர்கள் என்றால் படிக்கவில்லை. எனக்கு கல்வி அறிவு இல்லாதபோதும் நானே தெரிந்து கொண்டேன். உங்களுடன் பிறந்த மற்றொரு சகோதரி பெயர் ரங்கநாயகி அம்மாள் அவார். ரங்கநாயகி என்பவர் தனியாக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் அது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு தவிர வேறு ஏதேனும் வழக்கு உங்களுக்கு உள்ளதா என்றால் வழக்கு எதுவும் இல்லை. ரங்கநாயகி அம்மாள் எப்பொழுது இறந்தார் என்றால் 2000ல் இறந்தார்.

அவர்களுடைய வாரிசுகள் யாரேனும் வழக்கு தாக்கல் செய்து உள்ளார்களா என்றால் அது பற்றி தெரியாது. நீங்கள் தாக்கல் செய்த விடுதலை பத்திரம் உங்களுக்கு யார் வாங்கி கொடுத்தது என்றால் நானே தான் வாங்கினேன். முதலில் ஜெராக்ஸ் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. உங்களுக்கு படிக்க தெரியாது அதில் உள்ள விவரங்கள் யார் படித்து சொன்னது என்றால் யாரும் படித்து சொல்லவில்லை. ரூபாய் 20000/- பெற்றுக் கொண்டதாக அந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த விவரத்தை உங்களுக்கு யார் சொன்னார்கள் என்றால் என் அண்ணன் தான் சொன்னார். விடுதலை பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் கணவர் என்ன வேலை செய்தார் என்றால் டைலர் வேலை செய்து வந்தார். உங்களை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். கிட்டத்தட்ட சுமார் 20 ஆண்டுகளாக அவர் உங்களுடன் வசிக்கவில்லை என்றால் வசிக்கவில்லை தான். 20, 25 ஆண்டுகளாக என்ன வேலை செய்து வந்தீர்கள் என்றால் ஏரி வேலை செய்து வந்தேன். பக்தவச்சலு கோஆபரேட்டிவ் சொசைட்டியில் வேலை செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் அப்பா என்ன வேலையில் இருந்தால் ஜோசியம் பார்த்து வந்தார். பால் வியாபாரம் செய்து வந்தார். கடந்த 1979 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் தெரியாது. உங்களுடைய அப்பாவின் இறப்புச் சான்றிதழ் எங்கு இருந்து வாங்கினீர்கள் என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் அசல் பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் அண்ணன் பக்தவச்சலத்திடம் உள்ளது. உங்கள் சகோதரர் பென்ஷன் வாங்கிக்கொண்டு இருக்கிறாரா என்றால் பெற்றுக் கொண்டுள்ளார். உங்கள் அப்பாவிற்கு ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் தெரியாது. கல்வி அறிவு இல்லாத பட்சத்தில் நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் உங்களுக்கு யார் வாங்கிக் கொடுத்தது என்றால் என்னுடைய வீட்டில் இருந்தது. உங்கள் கணவர் விஜயகுமார் கையொப்பம் போடுவாரா என்றால் கையெழுத்து போடுவார். நீங்கள் குடியிருப்பது சிறு காவேரிப்பாக்கம் மெயின் ரோடு என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் ஐந்தில் விடுதலை பத்திரத்தில் உள்ளது உங்களுடைய

புகைப்படம் மற்றும் உங்களுடைய கையொப்பம் என்று சொன்னால் சரிதான். வீட்டு வரி மற்றும் குழாய் வரி மாற்றுவதற்கு எதற்கு புகைப்படம் எடுக்கிறீர்கள் என்று கேட்டீர்களா என்றால் கேட்கவில்லை. நீங்கள் ரூபாய் 20000 பணம் பெற்றுக் கொண்டுதான் விடுதலைப் பத்திரம் எழுதி கொடுத்தீர்கள் என்றால் சரியில்லை. கீதாலட்சுமி ரங்கநாயகி என்பவரது மகள் என்று சொன்னால் சரிதான். கீதாலட்சுமி பாகம் ஏதேனும் கேட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் உங்கள் தாயாருக்கு வாரிசு சான்றிதழ் வாங்கினீர்களா என்றால் வாங்கவில்லை. நீங்கள் உங்கள் தாயாரின் வாரிசு சான்றிதழ் வாங்காத பட்சத்தில் எப்படி தாக்கல் செய்தீர்கள் என்றால் தெரியாது. பிரதிவாதி பக்தவச்சலு அவருடைய தந்தையார் கேசவல்லி நாயுடு பெயரில் சொத்தை வாங்கி வைத்திருந்தார் ஆகவே தான் நீங்கள் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தீர்கள் என்றால் சரியில்லை. ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.